
## சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் – அமைச்சர் மா.சுப்பிரமணியனின் எழுச்சிமிகு ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கல் விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பித்த எழில்மிகு காட்சிகள்!











தமிழ் புத்தாண்டு மற்றும் தை பொங்கல் திருநாளை கொண்டாடும் வகையில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஏற்பாட்டில், அறிவகம் திருமண மண்டபத்தில், 1200 நபர்களுக்கு வேஷ்டி, சேலை, பரிசுப் பொருள்கள் வழங்கும் விழாவில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, மாவட்ட பொறுப்பாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், ஆர்.கே நகர் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான ஜே.ஜே.எபினேசர் ஆகியோர் கலந்துகொண்டு வேஷ்டி, சேலை, பரிசுப் பொருள்களை வழங்கினார்கள். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் திராவிட பொங்கல் விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு தலைமையில் நடைபெற்றது.இதில் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ,வர்த்தகர் அணி மாநில செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்.உடன் பகுதி செயலாளர்கள் எஸ்.முரளி, நந்தனம் கி.மதி, வர்த்தகரணி தலைவர் எஸ். மோகன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தமிழர் திருநாள் தை பொங்கலை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் நகரக் கழகச் செயலாளரும் நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் 500 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்கள் பொதுமக்களுக்கு புத்தாடை மற்றும் பொங்கல் பரிசு, பிரியாணி வழங்கினார். உடன் நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், மற்றும் நகராட்சி ஆணையர் தாமோதரன், தி.மு.க. நிர்வாகிகள், நகர் மன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தமிழர் திருநாளான தைப்பொங்கலை முன்னிட்டு தமிழ்நாடு முதல்வர் மற்றும் தமிழ்நாடு துணை முதல்வர் ஆகியோர் வழிகாட்டுதலின்படி அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆகியோர் ஆலோசனைப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர். குமரன், திருவள்ளூர் தொகுதியில் உள்ள பல்வேறு தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள், ஏழை எளிய பொதுமக்களுக்கு புத்தாடை, அரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை பொங்கல் பரிசினை வழங்கினார். அருகில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.